தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் 13, வெள்ளிக்கிழமை

ஐப்பசி 27, பிரபவ— திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செய்ன்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.''

கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

திருவொற்றியூர், மூலக்கடை, மாதவரம், கத்திவாக்கம் போன்ற பகுதிகளை சென்னை நகர காவல் துறையின்கீழ் கொண்டு வருதல்.

85— (*வினா எண் 4077) திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், மூலக்கடை, மாதவரம், கத்திவாக்கம் போன்ற பகுதிகளை சென்னை நகர காவல் துறையின்கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) : திருவொற்றியூர், மூலக்கடை, மாதவரம் ஆகிய பகுதிகளை சென்னைப் பெருநகர் காவல் நிலையத்தின்கீழ் கொண்டு வருவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. கத்திவாக்கம் பகுதி எண்ணூர் காவல் நிலைய எல்லைக்குள் உள்ளது. எண்ணூர் காவல் நிலையத்தை சென்னை பெருநகர் காவல் சரகத்தில் சேர்க்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. ஜி. கே. ஜெ பாரதி : மாண்புமிகு பேரவைத் தலை நாயகர் அவர்களே, சென்னைப் புற நகர்ப் பகுதிகளில் பல்வேறு தவறுகள் இழைக்கப்படுகின்றன. இப்பகுதி களைச் சென்னை நகர்க் காவல் துறையிடம் சேர்க்கின்ற கருவுரு இருக்கின்றதா ? மேலும், கடந்த மூன்றாண்டுகளாக திருவொற்றியூர் பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 48 கொலைகள் நிகழ்ந்து இருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகளை அரசு உருவாக்குவதற்கு அந்தக் காவல் நிலயங்களை உடனடியாகச் சென்னை காவல் துறையோடு சேர்க்கின்ற கருவுருவை எப்பொழுது செயல்படுத்தப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1982-வது ஆண்டு அக்டோபர் திங்களிலே செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்திலுள்ள 12 காவல் நிலையங்களைச் சென்னை நகர்ப் பகுதிக்குக் கொண்டு வரலாம் என்ற அளவிற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி வில்லிவாக்கம், மதுரவாயல், ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, மாதவரம், பரங்கிமலை, மீனம்பாக்கம், திருவொற்றியூர், ஆதம்பாக்கம், கே. கே. நகர் ஆகிய இந்தப் பகுதிகளைக் கொண்டுவந்தாலும் இவை உயர்நீதிமன்றத்தினுடைய எல்லைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். உயர்நீதி மன்ற எல்லைக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றால் முதலில் மாநகராட்சி எல்லைக்குள் வந்தால் தான் உயர்நீதிமன்ற எல்லைக்குள் வரும். உயர்நீதிமன்ற எல்லைக்குள் வந்தால்தான் அதற்குப் பிறகு காவல் நிலையத்தை இங்கே எடுக்க முடியும் என்று சட்டதிட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்ற காரணத் தினாலே இப்பொழுது அந்தக் காவல் சட்டத்தையே இதற்குப் பொருந்துமாறு திருத்தலாமா என்று பரிசீலிக்கப்படுகிறது. ஏனென்றால் மாநகராட்சி மன்றத்தை இந்தப் பகுதியை உள்ளடக்கிய வகையிலே திருத்தி அதற்குப் பிறகு உயர்நீதி மன்றத்தினுடைய அதிகார வரம்பை நீட்டிக்கின்ற நிலைமையை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமேயானால், தானாகவே இந்தக் காவல் நிலையங்களெல்லாம் சென்னை மாநகரத் திற்கு வந்துவிடும். ஆகவே. மாநகராட்சி மன்றத்தினுடைய முடிவுக்குப் போகின்ற அளவிற்கு, சிக்கல்கள் இல்லாத அளவிற்கு இந்தக் காவல் துறை சட்டத்திலேயே எந்தெந்தப் பகுதிகள் சென்னை மாநகரத்தினுடைய சென்னை கமிஷனருடைய பார்வையின் கீழே இருக்கலாம் என்ற அளவிற்குக் காவல்துறை சட்டத்தையே திருத்தலாம் என்ற அந்தச் செயற்குறிப்பு இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுபற்றி முடிவு எடுத்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படும்.

1987 நவம்பர் 13]

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவையின் தலைநாயகர் அவர்களே, எண்ணூர், கத்திவாக்கம், மாதவரம், மணலி போன்ற காவல் நிலையங்களிலே காவலர்கள் ஆறு, ஏழு பேர்கள்தான் இருக்கிறார்கள். சென்னையிலே 50 காவலர்கள் இருக்கிறார்கள். காவல் நிலையங்களில் வேறுபாடு ஏன்? மேலும், அந்தப் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் M. R. L. எண்ணெய் களவாடுதல், மேலும் கொலைக் குற்றவாளிகள் சென்னை மாநகரிலேயிருந்து அங்கே தஞ்சம் அடைகின்ற அளவிற்குக் கொலைகாரர்களுடைய சரணாலயமாக மாறிவிடுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே காவலர்களை அதிகப்படுத்துவீர்களா? அதிகப்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் பரிந்துரையாவது செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல் நிலையங்களுக்குக் காவலர்கள் எந்த அடிப்படையிலே வைக்கப்படுகிறார்கள் என்ற குறிப்புகள் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்தப் பகுதிகளிலே எந்தத் தன்மையின் அடிப்படையிலே காவலர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றும், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்தப் பகுதியினுடைய பந்தோபஸ்து மற்றவற்றைக் கவனிக்கக் கூடுதல் செய்ய இயலுமா என்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்ல இயலும்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து திருவான்மியூர், வேளச்சேரி, விருகம்பாக்கம், திருமங்கலம், வில்லிவாக்கம், கே. கே. நகர் போன்ற பகுதிகள் சென்னையோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இது வரையில் அந்தக் காவல் நிலையத்தினுடைய ஜுரிஸ்டிக்ஷன் சென்னை நகருக்கு மாற்றப்படவில்லை. வழக்கு மன்றங்களுடைய ஜுரிஸ்டிக்ஷனும் சென்னை நகருக்கு மாற்றப்படவில்லை. சிட்டி போலீஸ் ஆக்ட்டை அமென்ட் செய்து மாற்றம் செய்வதற்குத் தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. பல ஆண்டு காலமாகியும் இன்னும் முடிவெடுக்கவில்லை. இன்றைக்கு நகரத்திலே இருக்கிற காவல் நிலையங்கள், பல கிராமங்களுக்கும் பொருத்தமற்றதாக இருக்கின்றன. ஆகவே, சென்னை நகரத்தில் இருக்கிற காவல் நிலையங்களை சென்னை நகரத்திற்கு மட்டும் என்று வைத்து, மற்ற பகுதிகளுக்கு வேறு காவல் நிலையங்கள் வைக்கின்ற குறிப்பும் வழக்குமன்றத்தினுடைய ஜுரிஸ்டிக்ஷனை மாற்றுகின்ற செயற்குறிப்பும் விரைவில் அரசால் அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இந்தக் குறிப்பிட்ட பகுதியிலே, முதலிலே சென்னை நகர்ப்புற முனிசிபல் கார்ப்பரேஷன் அறிக்கை வெளியிட்டு பின்பு அப்பகுதிகளுக்கு உயர்நீதிமன்ற சாதாரண அசல் அதிகார வரம்பினை நீட்டிக்க மிகவும் கால தாமதம் ஆகிறது என்றும், அதனால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும் என்றும் கருதப்படுகிறது. எனவே, மேற் குறிப்பிட்டபடி நடவடிக்கை தொடரப்படவில்லை. அதற்கு மாறாக, சென்னை நகரக் காவல் சட்டம், 1888 பிரிவு 3-ஐச் சற்று திருத்தி அமைத்து, அப்பகுதிகளை, அதாவது, சென்னை உயர்நீதிமன்ற சாதாரண அசல் அதிகார வரம்பிற்குள் வராத, உள்ளூர் எல்லைக்குள் இல்லாத அப்பகுதிகளையும் சென்னைக் காவல் சட்டத்தின் ஒரு இணைப்பாகச் சேர்த்து, அப்பகுதி களுக்குச் சென்னைக் காவல் சட்டத்தைப் பொருந்துமாறு செய்ய இந்தச் சட்டத்தைத் திருத்தலாமா என்பதைப் பற்றித் தான் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி.

86—(*வினா எண் 13239) திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடிக்குத் தேவையான நிலக்கடலை எண்ணெயில் 75 சதம் வெளி வியா பாரிகளிடம் வாங்கப்படுவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) சிந்தாமணி சிறப்பங்காடிக்குச் சொந்தமான நிலக் கடலை அரைத்து எண்ணெய் எடுக்கும் எண்ணெய் தொழிற் சாலை சரிவர செயல்படாததால், தனியாரிடம் எண்ணெய் வாங்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இதன் மீது எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை